## உள்ளூராட்சி சேவை விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உள்ளூராட்சி சேவை விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத்தில் சம்பளத்தில் இருந்து அறவிடப்பட்ட மற்றும் நிதியத்திற்கு நேரடியாகக் கிடைத்திருந்த கூட்டுத்தொகையான ரூபா 35,362 முறையாக இனங்காணப்பட்டு கணக்குகளில் வைக்கப்படாமல் ஏனைய பெறுவனவாக வருமானச் செலவினக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் 05 சந்தர்ப்பங்களில் ரூபா 540,153 கூட்டுத்தொகையான கிடைப்பனவுகள், காசேட்டில் இரண்டுமுறை பதியப்பட்டிருந்தமையை திருத்துகையில் உரிய கணக்குகள் இனங்காணப்பட்டு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக வேறு கொடுப்பனவாக வருமானச் செலவினக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் ஒட்டு மொத்த ஓய்வூதியச் செலவினம் கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. ஓய்வூதியத்

திணைக்களத்தின் கணனி தரவு முறைமையின் செலவின வகைப்படுத்தலின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதியத்தின் ஒட்டு மொத்த ஓய்வூதியச் செலவினம் ரூபா 528,509,419 ஆக இருந்தது.

**1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல வருட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 3,417,942 தொகையான மதிப்பிழந்த காசோலைக் கணக்கின் மீதியினைத் தீர்த்து வைப்பதற்கோ அல்லது பணத்தினைப் பெற்றுக் கொள்வதற்கோ மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வங்கி கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இனங்காணப்படாத பெறுவனவுகள் ரூபா 150,476 தொகை நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய பணமாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

**1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பின்வரும் ஒவ்வொரு விடயங்களிற்கும் முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்று |
|---|---|---|---|
| (I) | பங்களிப்புப் பணக் கிடைப்பனவு | 295,141 | (I) கால அடிப்படையில் முறையாகப் பராமரிக்கப்பட்ட பதிவேடு<br>(II) பங்களிப்புத் தொகை கிடைக்கப்பெற்ற நிறுவகம் தொடர்பான பதிவேடு<br>(III) கழிப்பனவுப் பதிவேடு |
| (II) | மதிப்பிழந்த காசோலைக் கணக்கு | 3,417,942 | மதிப்பிழந்த காசோலைப் பதிவேடு |

(ஆ) செயற்பாடற்ற வங்கிக் கணக்கில் 2002 சனவரி 31 இல் உள்ளவாறான வங்கிக்கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் காண்பிக்கப்பட்ட பின்வரும் மீதிகள் தீர்க்கப்பட்ட விதம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

| விபரம் | தொகை |
|---|---|
| | ரூபா |
| தீர்க்கப்படாத கொடுப்பனவுகள் | 5,948,929 |
| தீர்க்கப்படாத பெறுவனவுகள் | 24,929,420 |
| இனங்காணப்படாத கொடுப்பனவுகள் | 1,649,845 |
| இனங்காணப்படாத பெறுவனவுகள் | 53,921,123 |

## 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1985 இன் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட தேசிய அரசாங்க சபையின் 1974 இன் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சரினால் விடுக்கப்பட்ட கட்டளைகளின் | கூறப்பட்ட கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் நிதியக் கொடுப்பனவுகளுக்காக முழுவதுமாக ஓய்வூதியத் திணைக்களத்தின் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. |

5(2) ஆம் இலக்க கட்டளை

(ஆ) நிதிப் பிரமாணங்கள்

| | | |
|---|---|---|
| (i) | நி.பி 189 மற்றும் 486 | மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி 143 (3)(ஆ) | 2011 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட வைப்பில் இடப்பட்டிருந்தும் தேறாத ரூபா 39,807 பெறுமதியான 03 வைப்புக்களை நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| i. | 4.1 (அ) ஆம் பந்தி | மீளாய்வாண்டின் பாதீடு விடயப் பொறுப்பு அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. | 4.3 (இ) ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2010 திசெம்பர் 13 ஆம் திகதிய 12/2010 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் 2(IV) ஆம் பந்தி | நிதியத்தின் மாதாந்த செலவினம் தொடர்பான ஒன்றிணைந்த அறிக்கை ஓய்வூதியத் திணைக்களத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 14,182,561 மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 3,967,150 ஆக இருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 10,215,411 தொகையான அதிகரிப்பினைக் காட்டியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ஏனைய பெறுவனவுகள் ரூபா 3,851,105 இனால் குறைவடைந்து திறைசேரி பிணைமுறி வட்டி வருமானம் ரூபா 3,814,387 இனால் அதிகரித்திருந்த போதிலும் செலவினம் ரூபா 11,484,897 இனால் குறைவடைந்தமை என்பன நிதிசார் விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

தேசிய அரசாங்க சபையின் 1974 இன் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவைகள் அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் மேற்கூறப்பட்ட நிதியத்தின் கட்டுப்பாடு ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் வசம் இருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தும் அதிகாரச்சட்டத்தின் கட்டளைகளுக்கு முரணாக 2010 திசெம்பர் 13 ஆந் திகதிய 12/2010 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றுநிரூபத்தின் மூலம் மாதாந்த சம்பளம் பட்டியல் தயாரித்தல் மற்றும் கோவையின் பொறுப்பளி தன்மை என்பன 2011 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் பிரதேச செயலாளருக்கு பன்முகப்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 நிதிசார் முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் நிதியத்தின் ஓய்வூதியம், ஓய்வூதியத் திணைக்கள செலவினத் தலைப்பிலிருந்து செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் நிதியத்தின் வட்டி வருமானமான ரூபா 13.1 மில்லியன் தொகை

நிதியத்தின் ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்காக பயன்படுத்தப்படாமல் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் சனவரி தொடக்கம் ஏப்ரல் மாதம் வரை ரூபா 1.9 மில்லியன் தொகை மற்றும் யூலை தொடக்கம் ஒக்தோபர் வரை ரூபா 1.3 மில்லியன் தொகையான மேலதிகப் பணம் முதலீடு செய்யப்படாமல் செயற்பாடற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) நிதியத்தின் மேலதிகப் பணம் முதலீடு செய்யப்படும் போது 2008 மார்ச் 03 ஆந் திகதிய 1/2008 ஆம் இலக்க திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றுநிரூபத்தில் அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டு நிதி மூலங்களான நிலையான வைப்பு மற்றும் திறைசேரி பிணை முறிகளில் எதிர்பார்க்கப்பட்ட நலன்களை மதிப்பீடு செய்து நிதியத்திற்கு சாதகமான முதலீட்டுத் தீர்மானம் எடுப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாமல் ரூபா 16.4 மில்லியன் தொகை திறைசேரி பிணை முறிகளில் மாத்திரம் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக அவ்வப்போது ஓய்வூதியப் பணிப்பாளர் நாயத்திற்கு அறிவுறுத்தப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வங்கிக் கணக்கிணக்கக்கூற்று தயாரித்தல்.

(ஆ) ஓய்வூதியம் செலுத்துதல்

(இ) முதலீடு